**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**<u>OS. NO:1776/2023</u>**

**<u>Deposition of Dw1:</u>** **<u>DATE:16.04.2025</u>**

**NAME: Saravanan**

**<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்</u>**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

வா.சா.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை தவிர பாலசுப்பிரமணியன் என்பவருக்கு வேறு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். மல்லிகா என்பவர் காலம் சென்ற பாலசுப்பிரமணியன் என்பவருக்கு ஒரே மனைவி என்றால் சரிதான். எனக்கு பாலசுப்பிரமணியத்தின் சொத்தில் வாரிசுதாரர் என்ற உரிமையில் எவ்வாறு பங்கு உள்ளதோ அதே போல வா.சா.2 வாரிசு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற நபர்களுக்கும் வாரிசுகள் என்ற முறையில் உரிமை உண்டு என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்துக்கள் பாலசுப்பிரமணியன் தனிப்பட்ட முறையில் சம்பாதித்த சொத்துக்கள் இல்லை. இந்த சொத்துக்கள் நிர்மலா ஸ்டோர், நிர்மலா சில்க், நிர்மலா டெக்ஸ்டயில் ஆகிய நிருவனங்கள் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது. நிர்மலா ஸ்டோர், நிர்மலா சில்க், நிர்மலா டெக்ஸ்டயில் ஆகிய நிருவனங்கள் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது என்பதை நிருபிக்கும் வகையில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த தாவா சொத்துக்களில் பாலசுப்பிரமணியத்தின் வாரிசு என்ற முறையில் பாகம் கோருகிறேனா என்றால் இந்த சொத்துக்கள் வாங்கப்பட்ட நிருவனத்தின் பங்குதாரர் என்ற முறையில் பாகம் கோருகிறேன். தாவா சொத்துக்களில் வாடகையை

2020ம் ஆண்டு வரை நிர்மலா ஸ்டோர் கணக்கில் செலுத்திவந்தார்கள் அதன்பிறகு கொரோனா காரணம் என்பதால் வருமானம் இல்லாததால் வாடகையை நான் வாங்கிவந்தேன். பாலசுப்பிரமணியன் 28.11.2012 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். கொரோனா காலம் வரை நிர்மலா ஸ்டோர் நிருவன கணக்கில் வாடகை பெறப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இன்றைய தினம் எடுத்து வந்துள்ளேன். தாவா சொத்தை பாலசுப்பிரமணியம் கிரையம் வாங்கிய வா.சா.3 ஆவணத்தை நான் படித்துப் பார்த்ததில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.2 ஆவணத்தில் கிரய தொகை என் அப்பா செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் அந்த தொகை நிர்மலா ஸ்டோர் பார்ட்னர்ஷிப் நிருவனத்தில் இருந்து வந்தது. வா.சா.2 ஆவணத்தில் நான் சொல்வது போல் நிர்மலா ஸ்டோர் பார்ட்னர்ஷிப் நிருவனத்தில் இருந்து வந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தற்போது சொல்ல இயலாது முழு ஆவணத்தையும் படித்தால் தான் சொல்லமுடியும். நான் தாவா சொத்தை பொறுத்து பாகப்பிரிவினைக்கு முன்வராத காரணத்தாலும் தாவா சொத்தை நானே அடையவேண்டும் என்ற காரணத்தாலும் வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத விவரங்களை கூறி நீதிமன்றத்தை திசை திருப்புகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலும், நிர்மலா ஸ்டோர் நிருவன சொத்திலும் பாலசுப்பிரமணியனின் வாரிசுகள் பாகம் கோர இயலும் என்றால் சரியல்ல இது போன்ற உரிமை அந்த நிருவன பார்ட்னர்ஷிப் பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை. மேற்படி ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா வேறு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை கோரப்படும் வழக்குகளில் பாகம் கோராதா தரப்பினருக்கும் நீதிமன்றம் பாகப்பிரிவினை பிரித்துக்கொடுக்க கடமைப்பட்டது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல்

செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பாரா 10ல் சொல்லப்பட்டுள்ள விவரத்திற்கும் இந்த வழக்குச் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் அனைத்து சொத்துக்களும் நிர்மலா ஸ்டோர் பார்ட்னர்ஷிப் நிருவனத்திற்கு சொந்தமானதாகும். இந்த சங்கதிகளை நிருபிக்கும் வகையில் இந்த வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை குறுக்கு விசாரணை செய்யும் போது குறியீடப்பட்ட ஆவணத்தில் அந்த விவரம் உள்ளது. நான் 37 ஆண்டு காலமாக பங்குதாரராக அயராது உழைத்ததாக இந்த நீதிமன்றத்தில் கூறுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் முன்பு குறிப்பிட்ட கடிதத்திலேயே சொல்லப்பட்டுள்ளது நான் 1990ம் ஆண்டு முதல் இந்த நிருவனத்தில் பார்ட்னராக உள்ளேன். நிர்மலா ஸ்டோர் நிறுவனத்தில் என் தாயார் குறிப்பிட்டகாலம் பங்குதாரராக இருந்தார் வாதியோ மற்றொரு சகோதரியோ பங்குதாரராக இருந்ததில்லை. என் தாயார் பங்குதாரராக இருந்தார் என்பதை நிருபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.11 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை இன்றைய தினம் எடுத்து வந்துள்ளேனா என்றால் என் வசம் உள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன் 2022ம் ஆண்டிற்கு முன்பு உள்ள காலத்திற்கான வாடகை ஒப்பந்தம் பாலாஜி என்பவரிடம் உள்ளது. தாவா சொத்தில் இறந்து போன பாலசுப்பிரமணியத்தின் உடன் பிறந்த சகோதரர்களுக்கோ அல்லது சகோதரரின் வாரிசுகளுக்கோ பாகப்பிரிவினை உரிமை இல்லை என்றால் சரியல்ல அவர்களுக்கும் உரிமை உள்ளது. அவர்கள் நிர்மலா ஸ்டோர் பங்குதாரர்கள். அந்த பங்குதாரர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் தர்மேந்திரன் என்பவரைப் பற்றி

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் பாலசுப்பிரமணயத்தின் வாரிசுதாரர் இல்லை குடும்ப உறுப்பினரும் இல்லை என்றால் சரிதான். நிர்மலா ஸ்டோர் நிர்வாகத்தில் எனக்கு பங்கு கொடுக்கவில்லை சம்பந்தமாக வேறு வழக்கு ஏதேனும் போட்டேனா என்றால் ஒரு வழக்கு தாக்கல் செய்தேன் அந்த வழக்கில் ஆர்பிட்ரேஷன் பரிந்துரை செய்யப்பட்டது எங்களுக்குள் சமாதானம் பேச முயற்சி நடந்து வருவதால் ஆர்பிட்ரேஷனுக்கு செல்லவில்லை. இது சம்பந்தமாக தாராபுரம் நீதிமன்றத்தில் வழக்கு எண். 424/2022 என்ற வழக்கு உள்ளது. இந்த வழக்கை தாராபுரத்தில் உள்ள வழக்குடன் சேர்ந்து நடத்த உத்தரவிடகோரி டி.ஆர்.சி.எம்.பி. 551/2024 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான் அது வா.சா.ஆ.10 ஆக குறியிடப்பட்டுள்ளது. அந்த வழக்கில் On perusal of entire record there is no rsemblance of similarity in both the suit in O.S.1776/2024 and 424/2022 என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது சம்பந்தமாக மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய உள்ளோம். இந்த உத்தரவிற்கு எதிராக மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளதாக ஒரு குறிப்பாணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் அது போன்று மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய எனக்கு வசதியில்லை. பெண்களுக்கு அவருடைய தகப்பனாரின் தனிப்பட்ட மற்றும் குடும்ப பூர்வீக சொத்தில் ஆண்களை போல பெண்களுக்கும் சம பங்கு உள்ளது என்றால் சரிதான் இந்த தாவா சொத்து என் அப்பாவின் தனிப்பட்ட வருமானத்தில் இருந்து வாங்கப்படவில்லை தாவா சொத்து ஒரு நிருவன வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது. தாவா சொத்து நிர்மலா ஸ்டோர் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டதால் வாதிகளுக்கோ என் அம்மாவிற்கோ மற்ற சகோதரிக்கோ

பாகம் கிடைக்காது.  வாரிசுகளுக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்தில் பொய்யான தகவலுடன் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றல் சரியல்ல.  வா.சா.5 ஆவணத்திற்கு எந்தவித பதிலறிவிப்பும் அனுப்பவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.